பதிப்புரிமை ஆசிரியருக்கே /All Rights to Author புதிய பாடத்திட்டம் / New Syllabus

# GEOGRAPHY EXAMINATION

NEW

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரி வினாத்தாள், 2020 ஓகஸ்ற்
General Cerificate of Education (Adv. Level) Model Paper, August 2020

புவியியல் II
Geography II

22 T II

மூன்று மணித்தியாலம்
Three hours

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப் பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடையெழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A Tamil (R)
077 2400 707 / 076 8044 959

MODEL PAPER 2
மாதிரி வினாத்தாள்

**அறிவுறுத்தல்கள்:**

சுட்டெண்: ........................................

* ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

**1.** (i) புவிக்கோளத்தின் **பிரதான** பிரிவுகளை அடையாளம் செய்க. (03 புள்ளிகள்)

(ii) மேலே, **வினா (i)** இல் உம்மால் அடையாளம் செய்யப்பட்டவற்றுள் யாதாயினும் ஒன்றைத் தெரிந்தெடுத்து அதன் அமைப்பு, சேர்க்கையின் **மூன்று** இயல்புகளை உதாரணங்களுடன் ஆராய்க. (03 புள்ளிகள்)

(iii) புவியோட்டின் அசைவுகளைத் தகட்டோட்டக்கொள்கை எந்தளவிற்கு விளக்குகின்றது என்பதை விரிவாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) புவியோட்டு விருத்திக்குரிய எல்லைகளில் இடம்பெறவல்ல பிரதான **இரு** அனர்த்தங்களைப் பெயரிட்டு, அவற்றுள் யாதாயினும் ஒன்றைத் தெரிந்தெடுத்து, குறித்த அனர்த்தமானது அத்தகைய எல்லைகளில் ஏற்படுவதற்குரிய காரணிகளைப் பொருத்தமான உதாரணங்கள் மற்றும் வரைபட உதவியுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) **'ஈரநிலம்'** என்பதை வரையறை செய்க. (02 புள்ளிகள்)

(ii) ஈரநிலச் சூழற்தொகுதியில் காணப்படும் கண்டல் தாவரங்களின் பண்புகளையும், முக்கியத்துவத்தினையும் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) கண்டல் தாவரங்களின் அழிவிற்குப் பொறுப்பான **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சூழற்தொகுதிகள் எதிர்நோக்கும் **இரண்டு** அச்சுறுத்தல்களையும், அச்சுறுத்தல்களிலிருந்து விடுவித்துக்கொள்ள மேற்கொள்ள முடியுமான **இரண்டு** தடுப்பு முறைகளையும் சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) மூலப்பாறை தவிர்ந்த மண்ணின் **நான்கு** படையமைப்புகளை அடையாளம் செய்க. (02 புள்ளிகள்)

(ii) மண் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) உலகின் வரண்ட பிரதேசங்களில் பரம்பிக் காணப்படும் மண்ணின் **நான்கு** இயல்புகளை அடையாளம் செய்க. (04 புள்ளிகள்)

(iv) உலகின் வரண்ட பிரதேசங்களில் தொழிற்படும் பிரதான உரிவுக்கருவியால் தோற்றுவிக்கப்படும், **நான்கு** நிலவுருவங்களைப் புனையாவரைபட உதவியுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

**4.** (i) **அனர்த்தம், இடர்** என்பவற்றை வேறுபடுத்துக. (03 புள்ளிகள்)


(ii) இலங்கையில் அதிகளவு இடம்பெறவல்ல **இரண்டு** அனர்த்தங்களை அடையாளம் செய்வதுடன், அவற்றின் உருவாக்கத்தில் மானிட செயற்பாடுகள் பங்களிக்கும் விதத்தினைச் சுருக்கமாக ஆராய்க. (05 புள்ளிகள்)

(iii) அனர்த்த நிலமைகளினால் ஏற்படவல்ல பாதிப்புக்களை இயலுமானவரை தணித்துக் கொள்ள, அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் பின்பற்றத்தக்க **நான்கு** வழிமுறைகளைச் சுருக்கமாகப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

(iv) அனர்த்த நிலைமைகளை இலகுவாக முகங்கொடுப்பதற்கு அனர்த்த முகாமைத்துவப் பொறிமுறைகள் எந்தளவிற்குச் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை மதிப்பிடுக. (06 புள்ளிகள்)

## பகுதி II – மானிடப் புவியியல்

**5.** (i) கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில், சனத்தொகை செறிவுமிக்க வலயங்கள் **A, B, C மற்றும் D** ஆகிய ஆங்கில எழுத்துக்களால் அடையாளம் செய்யப்பட்டுள்ளன. அவற்றைச் **சரியாக** இனங்கண்டு பெயரிடுக. (02 புள்ளிகள்)




(ii) **A, B மற்றும் C** ஆகிய சனத்தொகை செறிவுமிக்க வலயங்கள் ஆசியாக் கண்டத்தில் அமைவு பெற்றிருப்பதைத் தீர்மானித்துள்ள, பௌதிக **மற்றும்** மானிடக் காரணிகள் இவ்விரண்டைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் குடித்தொகையின் **நான்கு** அண்மைக்காலப் போக்குகளை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) உலகக் குடித்தொகைப் பரம்பல் பண்புகளுடன் இணைந்து காணப்படும் **நான்கு** பிரச்சினைகளைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக. (08 புள்ளிகள்)

**6.** (i) **'சுரங்கமறுத்தல் கைத்தொழில்'** என்பதை வரையறை செய்க. (02 புள்ளிகள்)

(ii) நிலக்கீழ் சுரங்கமறுத்தல் செயற்பாட்டுடன் தொடர்புபடும் **நான்கு** கனியங்களை அடையாளம் செய்க. (02 புள்ளிகள்)

(iii) மேலே, **வினா (ii)** இல் உம்மால் அடையாளம் செய்யப்பட்ட கனியங்களுள் யாதாயினும் ஒன்றைத் தெரிவுசெய்து, **அதனைப்** பின்வரும் தலைப்புக்களின் கீழ் சுருக்கமாக ஆராய்க.
(அ) பரம்பல் பாங்கு (ஆ) வர்த்தகச் செயன்முறைகள் (06 புள்ளிகள்)

(iv) சுரங்கமறுத்தல் கைத்தொழிலுடன் தொடர்புடைய **இரண்டு** அண்மைக்காலப் போக்குகளையும், **மூன்று** சவால்களையும் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) இலங்கையில் சனத்தொகை செறிவுமிக்க **ஆறு** நகரங்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) இலங்கையின் நகரமயமாக்கல் தொடர்பான **மூன்று** செயன்முறைகளையும் அடையாளம் செய்க. (03 புள்ளிகள்)

(iii) துரித நகராக்கத்தின் காரணமாக பிரதான நகரங்கள் எதிர்நோக்கும் **நான்கு** சவால்களைப் பொருத்தமான உதாரணங்களின் துணைகொண்டு விரிவாக ஆராய்க. (08 புள்ளிகள்)

(iv) நகராக்கப் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு இலங்கை முன்னெடுத்துவரும் **நான்கு** முகாமைத்துவச் செயற்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

**8.** (i) ''தற்கால உலகில் பிராந்தியக் கட்டமைப்புகளுக்கான அத்தியாவசிய தேவையொன்றுள்ளது'' - இக் கூற்றினைச் சுருக்கமாக ஆராய்க. (**03** புள்ளிகள்)

(ii) ஐரோப்பிய யூனியனின் **(EU)** பிரதான நோக்கங்களையும், பணிகளையும் சுருக்கமாக விவரிக்குக. (**05** புள்ளிகள்)

(iii) ஐரோப்பிய யூனியனானது **(EU)** தனது இலக்குகளை உரிய விதத்தில் எட்டுவதற்குத் தடையாகவுள்ள **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. (**06** புள்ளிகள்)

(iv) ''வளர்முக நாடுகளின் பிராந்திய நிறுவனங்கள் உலகமயமாதலின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதை முதன்மை நோக்காகக் கொண்டுள்ளன'' – ஆசியாவில் **இரண்டு** முக்கியமான பிராந்திய நிறுவனங்களிலிருந்து குறிப்பான உதாரணங்கள் தந்து இக் கூற்றினைப் பரிசீலிக்குக. (**06** புள்ளிகள்)

* * *

A.Kajan - -A.Kajan